அல்லாஹு அக்பர்



வந்தே மாதரம்

உ

ஹிந்து தேசாபிமானிகளின் பேரில்

# தேச நன்மணி திலகம்.

(இரண்டாம் பாகம்)

இஃது

கம்பம் ஸ்ரீமான் மீ. பீர்முஹம்மது புலவர்

அவர்களின் சிஷ்யர்

தாராபுரம் முஹம்மதுசேன்சாயபு

அவர்கள் இயற்றியதை

கருவூர் "விவேகபாநு அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

1926 [அணா 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 8 FEB 1926

2099

224499.

அல்லாஹு அக்பர்



வந்தே மாதரம்.

உ

ஹிந்து தேசாபிமானிகளின் பேரில்

# தேச நன்மணிதிலகம்.

(இரண்டாம் பாகம்.)

---

இஃது

கம்பம் ஸ்ரீமான் மீ. பீர்முஹம்மது புலவர்

அவர்களின் சிஷ்யர்

தாராபுரம் முஹம்மதுசேன்சாயபு

அவர்கள் இயற்றியதை

---

கருவூர் " விவேகபாநு அச்சுக்கூடத்தில்"

பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1926 [அணா 2

224499

# தேச[illegible]ன்மணி திலகம்.

## வெண்பா.

காருண்ய காந்திமஹான் காக்ஷிதனை விளங்குதர்க்கு
யாருந் துணைகாணேன் ஆண்டவனே—பாருலகில்
முத்தி தருவாய் மொழிபெயர்த்துச் செப்புதர்க்கு
சத்தி தருவாய் சரண்.

N26

## 1. நாட்டுச்சிறப்பு.

( சீர்வளர் நாடு என்ற மெட்டு. )

இராகம் முகாரி.

(1) சீர்பெரும் நாடு மற்ற தேசத்தொண்டரும்
காந்தீ மஹானும் செல்வம்புரி நாடு.

அநுபல்லவி.

(2) வந்தேமாதரம் வழங்கும் நாடு
வானவர்களும் போற்றும் நாடு
வாக்குகள் மாருத உண்மைநாடு
வையகம்புகழும் சாற்றும் நாடு (சீர்பெரும்)

(3) விலைகள்மதிக்கா உருதி நாடு
வேண்டிய கதிர்கள் செய்தநாடு
தேர்ச்சியும் அடையும் நம்மவர்நாடு
தேசஞ்செழிக்கும் இந்தியா நாடு. (சீர்பெரும்)

(4) பஞ்சவர்களும் வாழ்ந்த நாடு
பக்தியின்பொருள் நிறைந்த நாடு
கவலைநீங்கி வழங்கும் நாடு
காட்சிமும்மாரி பொழியும் நாடு (சீர்பெரும்)

(5) சத்தியந்தவறு திருக்கும் நாடு
சாதுக்கள் சஞ்சார மானநாடு
முற்றிலுஞ் சுயராஜ்ஜியம் வேண்டும்நாடு
முயற்சியாய் காந்தியை கொண்டாடும்நாடு (சீர்)

(6) மதத்தின்தேர்ச்சிகள் மகிழும் நாடு
முஹம்மதியர்கள் ஒற்றுமை நாடு
பாரில்பீர் முஹம்மது வாழும்நாடு
பதத்துடன் முஹம்மதுசேன் போற்றும்நாடு. (சீர்)

---

## 2. தேசத்தொண்டர்களுக்கோர் அறிக்கை.

( பச்சமலை பவளமலை என்றமெட்டு. )

ஏகதாளம்.

(1) இனியநாட்டு தேசத்தொண்டர் எல்லாம் ஒன்றாய்கூடும்
இனிமேல் வெற்றிபாரும்
எம்பெருமான் அரசியுடன் அவதரித்தல்கேளும் (இனிய)

(2) காருண்ய மேனியினால் காட்சிதரவந்தார்
நற்கருத்தையும் உரைத்தார்
காந்திமஹா னென்னும் குஜராத்தில் வசித்தார் (இனிய)

(3) காங்கிரஸ் மஹாநாட்டின் எங்கும் ஜெயபேச்சு
காணுதலும் ஆச்சு,
காந்திமஹானின்வாக்கு அஹிம்சைக்குள்ளாச்சு (இனிய)

(4) முன்னவரின் வாக்குகளை மொழிதவர்ந்து நடந்தார்
இந்தியா எங்கிலும் அறிந்தார்
ஆனதால் ஹிந்துமுஸ்லீம்கள் ஒற்றுமையாய்ச்சேர்ந்தார்.

(5) திக்குகளில் மிக்கபுகழ் தீரன் பிரகாசன்
சிறப்பள்ளிநகர் வாசன்
தேர்ந்ததொழில் நாட்டிணத்தின் திருச்சிடாக்டர் ராஜன்

(6) இந்தியாவின் மக்களுக்கு ஏற்பட்ட இத்தேசம்
எங்கும் பிரகாசம்
இன்பம்தரும்.ராமசாமி நாய்க்கர் ஈரோட்வாசன் (இனிய)

(7) முஹம்மதலி ஷவ்கத்தலி எங்கும்புகழ் வாசர்
இந்தியர்களின் நேசர் இத்தேசம் விசுவாசர்
தேர்ச்சிசெய்தார் கைத்தறியை தீரர் பிரகாசர் (இனிய)

(8) மதுரைத்தமிழ் சீர்பெருகும் பீர்முஹம்மது சீடன்
பாரத மக்களின்நேசன்
பகைவரையும் வெல்லும்பாலன் முஹம்மதுசேன் (இனி)

---

## 3. மதுவின்மீது.

(ஜாதி மதம் முதல் தேதிசுயம்வரை என்ற மெட்டு)
இராகம் காம்போதி - ஏகதாளம்.

(1) மதுவை அருந்தி மானங்கள் குலைந்து
மாதர்களையே யடித்து
கடைவீதி எங்கும் உலாவும்போது

(2) பொல்லாத போலீஸ் நில்லாமலே தள்ளி
சார்ஜ்ஜுக்குள்ளாக்கிடுவார்
பின்னாலே மரியாதையும் போக்குவார்

(3) ஊரார் உற்றவரும் சொந்தப்பந்துக்களும்
கண்டு நகைத்திடுவார்
பணமது போனவழியரியார்

(4) இந்தியா எங்கிலும் பொல்லாக் குடியாலே
கொலைகள் அதிகமுண்டு
சர்க்கார் அதிகாரிக்கும் லாபமுண்டு

(5) மக்கள் மனைவிகள் குக்கச் சாலையற்று
தேங்கி தேங்கியழுவார்
அனுதினம் குடித்துவந்துத் துள்ளுவார்

(6) நல்லோர் பொல்லார் என்றும் ஒன்றும்தெரியாமல்
நாயைப்போலே கத்துவார்
மதுவினால் மனங் குலைந்தழுவார்

(7) முனிவர் மஹாத்மா சொல்லின்படி இது
கம்பம் பீர்முஹம்மதின்
சிஷ்யன் முஹம்மதுசேன் சொல்லிது.

224499
031,1x
N.2

## 4. இந்திய துரைத்தனத்தின் செய்கை.

(இங்கிலாந்து போய்ச ... மெட்டு)

(இராகம் செஞ்சுருட்டி—தாளம் ஆதி)

(1) இந்தியாவின்குறைகேளும் வோய்
பாரதநாட்டின் பாலர்களேநீர் (இந்தியாவின்)

(2) செல்வம்மிகுந்த எங்கள்தேசம்
அதில் சிறித்து பாசாங்கு செய்தமோசம்
வருமை நீங்கிடில் பிரகாசம்
வஞ்சகன் நெஞ்சைபிளந்திட நாசம் (இந்தி)

(3) அவர் மதவிரோதி யாகவந்தார்
எங்கள் மகிமை முழுவதையும் கெடுத்தார்
நல்ல நேசரைப்போலவே வந்தார்
தங்கள் இனத்திற்கே பலஅதிகாரம் கொடுத்தார் (இந்)

(4) கொலை சதித்து செய்யும் அவர்ஜாதி
எங்கள் மனப் பூர்வீக விரோதி
இனி தழைத்திருக்குமவர்நீதி
அவரை நினைத்திடில் பெருகிடும் கெட்ட அநீதி (இந்)

(5) தலைவரை தெரியாமல் பிடித்தார்
எங்கள் தாய்நாட்டின் பக்தர்களை அடைத்தார்
செய்த உதவிக்கி செக்ஷன்களைக் கொடுத்தார்
அவர் ஜாதியின் வரலாறு தெரியுதுபார்த்தீர் (இந்)

(6) கொடிய ராஜாங்க சட்டம் வெல்வோம்
அதின் குணங்களெல்லாம் அறிந்துக் கொள்வோம்
கம்பம் கலியூகபீர் முஹம்மத் சிஷ்யன்
தாசன் முஹம்மதுசேன் தாரைநகர் வாசன் (இந்)

---

## 5. அலீசகோதரர்மீது.

(சுதேச முஹம்மதலீ என்றமெட்டு)

இராகம் இந்துஸ்தான்தோடி—தாளம் ஆதி.

(1) சயவாழ்க முஹம்மதலீ சொல்லின்படி எங்கும் ஒலி
இன்னும் பிரசங்கம்சொல்லி வருவார் ஷவுக்கத்தலி (சய)

(2) மன்னவர்கள் புகழும் பக்தர்
மறைநூல்கள் அறிந்த சித்தர்
மாட்சிமை சுய ஆட்சியின்பேர்
அங்கும் இங்கும் பரவிவந்தார் (சுய)

தொகைரு

நாம் கதிராடையைத்தரித்து சிரைவாசம் மீட்டுவோம்
நமது நாட்டின் அடிமைநீங்கி சுயவாழ்வைவெல்வோம்

பாட்டு

(3) மதஞானம் ஊட்டும் நேசன்
சென்னைநகர் யாகப்ஹுசேன்
தாய்நாடு போற்றும் வாசன்
தாரை வளர் முஹம்மதுசேன்

---

## 6. அஸ்தீநாபுரம் ஹகிம் அஜ்மல்கான்பேரில்.

(அய்யா பழனிமலை வேலா என்ற மெட்டு)

இராகம் இந்துஸ்தான் தோடி - தாளம் ஆதி,

(1) ஹகிம் அஜ்மல்கான் சுதேசி அவர்
அகில இந்தியா விசுவாசி
தொண்டர்களுக்கு உபதேசி இவர்
துரிதமுடன் பிரகாசி (ஹகீம்)

(2) கங்கணம் கட்டி காங்கிரஸ் வகித்தார்
காந்தியின் கட்டளையும் விதித்தார் சுதேசி
கதர்துணி தறித்தார் ஜெகமிதில்
ஜெயக்கொடி பிடித்தார் (ஹகீம்)

(3) பாலர்கள் நெசவுதொழில் படிக்க
பாரத பாவுகளும் நெய்க
செல்வம் புகழும் நம்நாடு
இனி சீர்பெருகும் நம்வீடு (ஹகீம்)

(4) ஹிந்து முஸ்லீம்களின் நேசம்
மொழிதவராத விசு வாசம்
இந்தியா எக்கும் உலாவும் மந்திரம்
இது காந்தியின் மந்திர சுதந்திரம் (ஹகீம்)

(5) இங்கு கொங்கு ராட்டை சுழன்றுட
குல கோத்திரம் எல்லாம் ஓங்க
மகிமை பீர் முஹம்மது ஷேன்
முஹம்மது சேன் வந்தேமாதரம் (ஹீம்)

---

## 7. தேசாபிமானிகள் மீது.

(நாவிலம் போற்றுக்கவி என்ற மெட்டு)

இராகம் செஞ்சுருட்டி-தாளம் ஆதி.

(1) இந்தியர்கள் கூடி இனிய தமிழின்படி
இந்து முஸ்லீம்கள் ஒற்றுமை
இந்தியா எங்கும் சாந்தகுணத்தின் பொருண்ம்
முடுக்கு
எக்காலத்திலும் மிக்கப் புகழ் பக்கவுதவிசெய் பாரதமர்த்தர்
பாலன் தமிழுக்கருளே பாண்டவர்களும் அறிவித்தார் இந்நூலை
பாட்டு

(2) பஞ்சாப்பில் வருமைசெய்த படுகொலை நினைத்திட்
பதைக்குதே எந்தன் ஆவி
பலன்கொடுப்பான் ஆண்டவன் ஒருதேதி
முடுக்கு
துரைத்தன முறைகளும் கிடைக்குமென்பது
சதித்துவேலை முடித்தோர்களைக் காண
அதுமுறை தெரிந்தவர்கள்
ஆனரபிள் பதவியை தூக்கி எறிந்தோர்.
பாட்டு

(3) திருச்சி சிங்காதனத்தின் தீரன் திருச்சிராஜன்
தென்பை நன்றுகச்சொன்னவன்
திரையகற்றும் சக்கரவர்த்தி ராஜகோபாலன்.
முடுக்கு
சொல்லின் சுழிமுனை சுகமாய்க்காட்டிய
சேயன் சுந்திரம் வாழ்க கதிரின்கண
சேலம் வாசிகள் வாழ்க.

பாட்டு

(4) ஈரோடு எங்கும்புகழ் ராமசாமி நாய்க்கரின்
எங்கும் திரமைக்காட்டினார்
கதரின் ஆடை எங்கும் பரவச்செய்தார்

முடுக்கு

எங்கும் பரவிய வந்தேமாதிரமே சாத்விகபோரின்
காந்தியின் கட்டளை என். கோவிந்தராவுமே
கதிருடனே மன மகிழ்ந்தார் நீதமே

பாட்டு

(5) பாரதமாதாவின் நீண்டதோர் பயிர்ச்சி
பீர்முஹம்மது சேடன் பாலர்கள் போற்றும்நேசன்
முஹம்மதுசேன்

முடுக்கு

மிக்கப்புகழ்புவி மங்கள் ராட்டினடைகள்
மனமது ஞாபகம் ஊட்டும்கவிஇது (இந்தியா)

## 8. தொண்டிச்சிந்து.

1. பாரத வளநாடு - பெற்ற பாலர்முதல் பிறந்த சிலருடனே, காந்தியென்னும் புண்ணியவான் - இட்ட கட்டளைப்படிநடக்க இஷ்ட முண்டெனில், திருமகள் கணவன் கையில் கொண்டே - திகிரியென வானில் இகழுகின்ற, ராட்டிணம் கைக்கொள்வீர் - அப்போ ராகவன் அருள்புரிவான் உங்களுக்கு, நாடுமுழுவதும் செழிக்கும் - மறைநாத மும் மறைபொழிய நயம்பயக்கும், கற்பினை நிலை நிருத்தும் - உங்கள் கைநிறைந்திடப் பணத்தைதந்து பொறுத்தும், பகைவரின் வேரருக்கும் - அவர்கள் பல்லிளித்திருக்கும்படி சொல்லியுருக்கும், பிணியொன்றும் அணுகாது, பொல்லா பில்லி சுனி யாவும் அதை பிடியாது - அபல்சண்டை வருவதில்லை, இந்த ஆனந்தத்திற்கிடுண்டோ அவனியில் எல்லை - குறைவற்ற செல்வமுண்டாம், உங்கள் கோத்திரம்தழைக்க நல்ல குமாரருமுண்டாம் - இகபர சுகமும் உண்டாம், நம்மை ஏழினம்செய் வெள்ளையர்க்கு மிழிவும் முண்டாம் - பாரத மக்கள் வாழ்க, நமது பாலகங்காதர திலகர் பேர்வாழ்க - காந்திமஹானும் வாழ்க, அவர்கள் காட்டியவழியிலே கைராட்டிணம் வாழ்க- அலீசகோதரர் வாழ்க - உண்மை அன்புடனே இந்து முஸ்லீம் ஐக்கியம் வாழ்க. வந்தே மாதரவோம்.

தேச நன்மணிதிலகம் இரண்டாம்பாகம் முற்றிற்று.

கூடிய சீக்கிரம் இதனடுத்த பாகம் வெளிவரும்.



# (Scorpion Sting)

## 1 தேள்கடி மருந்து

**குணமாகாவிட்டால் ரூபாய் 50—0—0 பரிசளிக்கப்படும்.**

இது ஒவ்வொருகுடும்பத்திலும் இருக்கவேண்டிய முதன்மையான ஔஷதமாகும்.

தேள், நட்டுவாக்களி, சியான், பாம்பு, எலி முதலிய விஷங்களை இரண்டே நிமிஷத்தில் பறக்கச்செய்யும். அதிக அனுபோகமான கைகண்டமருந்து. இதை உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

| | | |
|---|---|---|
| இரண்டுவித மருந்துகள் பாக்கெட் | அணா | 0—8—0 |
| ஷை மருந்து டஜன் | 1-க்கு ரூ. | 3—12—0 |
| ஷை ஷை குரோஸ் | 1-க்கு ரூ. | 40—0—0 |

**இதற்கு கமிஷன் கிடையாது.**

**டி. எஸ். எம். உசேன் அண்டு கோ,**

வேலூர், புகளூர் மார்க்கம்.

புஸ்தகங்கள்வேண்டுவோர் மேல்கண்டவிலாசத்துக்கே எழுதவும்

## சுதேச ஷர்பத்து தினுசுகள்

இவைகள் வெய்யில்காலங்களில் மிக்க குளிர்ச்சியைக்கொடுத்து மனம்சந்தோஷிக்கச்செய்யும்.

**இது அநேக இங்கிலீஷ் டாக்டர்களும் யூனனி வைத்தியர்களாலும் நன்குமதிக்கப்பட்டது.**

| | | |
|---|---|---|
| சந்தனம் ஷர்பத்து பாட்டல் | 1-க்கு ரூ. | 1—4—0 |
| வெட்டிவேர் ஷர்பத்து பாட்டல் | 1-க்கு ரூ. | 1—4—0 |
| பாதாமி ஷர்பத்து பாட்டல் | 1-க்கு ரூ. | 1—4—0 |
| எலிமிச்சம்பழம் ஷர்பத்து ,, | 1-க்கு ரூ. | 1—4—0 |
| ஆப்பிள் ஷர்பத்து ,, | 1-க்கு ரூ. | 1—4—0 |
| ரோஸ் ஷர்பத்து ,, | 1-க்கு ரூ. | 1—4—0 |
| நன்னாரி ஷர்பத்து ,, | 1-க்கு ரூ. | 1—4—0 |

ஷை ஷர்பத்து பாட்டல்களின்பேரில் இருக்கும் லேபில்களில் சுதேசிராட்டை அடையாளம் கவனித்து வாங்கவும் பாட்டல்வாயில் வெள்ளை ஈய்யகேப்வபில் கவரிங் பார்த்துவாங்கவும்.

தேவையுள்ளவர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு ஆர்டர்செய்தும் வி. பீ. மூலமாயும் நேரிலும் வாங்கிக்கொள்ளவும்.